<u>**DEPOSITION OF WITNESS**</u>

**In the court of Sub Court, Eraniel**

**S.C.No. 289/2023**

**Prosecution Witness - PW6**

| | |
|---|---|
| Name | : திருமதி. சசி |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.02.2026

(Accused absent. Petition U/s.355 BNSS is filed and allowed).

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தஞ்சாவூர் செயலாக்க பிரிவில் (Enforcement wing) வட்டார போக்குவரத்து அலுவலராக பணியில் இருக்கிறேன். கடந்த 26.04.2022 தேதியில் மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலராக நான் பணியில் இருந்த போது கருங்கல் காவல் நிலைய ஆய்வாளர் கு.எண். 134/2022 ன் படி TN 74 G 529 என்ற பதிவு எண் கொண்ட டாடா சுமோ கார் வாகனத்தினை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த ஆய்வில் வாகனத்தின் முன் மற்றும் பின் காற்றுத்தடை கண்ணாடி துகள்களாக உடைந்திருந்தது. வலது பக்க ஜன்னல் கண்ணாடி துகள்களாக உடைந்திருந்தது. என்று அறிக்கை அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படுவது அந்த அறிக்கை ஆகும். அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அந்த வாகனத்தின் இடது பக்க கண்ணாடியில் சேதம் எதுவும் காணப்படவில்லை என்றால், சரிதான். கண்ணாடி முழுவதும், துகள்களாக உடைந்து காணப்பட்டது. எனது விசாரணையில் வலது பக்க கண்ணாடி, டாடா சுமோ காரின் பின் இருக்கையின் வலது பக்க ஜன்னல் கண்ணாடி என்று

அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன். எனது ஆய்வானது 26.04.2022 அன்று பகல் 12.50 மணிக்கு ஆரம்பித்து, மதியம் 1.00 மணிக்கு முடித்தேன். நான் குறிப்பிட்ட நேரம், தேதியில் மற்றும் நான் குறிப்பிட்ட விதத்தில் மேற்படி வாகன சோதனை நான் செய்யவில்லை என்றாலும், நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**